1st April 1963]

குடிநீர் வழங்கும் திட்டம் (இராசிபுரம்)

*481 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பனமரத்துப்பட்டியிலிருந்து இராசிபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இவ்வேலை மேற்கொள்ளப்பட்டு நடப்பு ஆண்டில் (1962-63) ரூ. 6·598 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

குடிநீர் வழங்குதல் (சென்னை நகர்)

*433 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் பற்றிய ஆராய்ச்சி முடிந்து விட்டதா?

(இ) அத்திட்டம் எப்போது செயலாக்கப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The investigation report submitted by the Chief Engineer, Public Works Department (General) is under the consideration of the Government.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்போது புதிதாக கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தைப் பற்றிப் பேசப்படுகிற காரணத்தினால் இது நிறுத்தி வைக்கப்படுமா? அப்படி அது வருகிறபோது, சென்னையின் தேவை அதிகமாக இருக்கும் என்று இந்தத் திட்டத்தையும் உடனடியாக அமல் நடத்தப் போகிறார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தத் திட்டத்தை நடத்துவதற்காக வேண்டி ஹெல்த் இன்வெஸ்டிகேஷன் டிவிஷன் என்று, சப்-டிவிஷன்கள் இரண்டு வைத்து என்னென்ன ஸ்டாஃப் வேண்டுமோ அதைப் போட்டு நடத்த அரசாங்கம் தீர்மானம் செய்திருக்கிறது. அவர்கள் பி. டபிள்யூ.டி-க்குக் கொடுக்கவேண்டும், இதற்கென்று தனிப்பட்ட முறையிலே வாட்டர் சப்ளை போர்டு ஒன்று எலெக்ட்ரிஸிட்டி போர்டு மாதிரி வைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

UNSTARRED QUESTIONS.

Godowns for foodgrains

22 Q.—திரு. முனு. ஆதி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை எங்கெங்கு எத்தனை கூட்டுறவு தானியக் கிடங்குகள் (Co-operative godowns for foodgrains) கட்டப்பட்டுள்ளன?